# விரைவில் இந்திய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம்

## எஸ்.ஜெய்சங்கர்-ரூபியோ பேச்சில் முடிவு

புது தில்லி, மே 24: பெரிதும் எதிர்பார்க்கப்படும் இந்திய-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை விரைவில் இறுதி செய்ய இரு நாடுகளும் தீர்மானித்துள்ளன.

தில்லியில் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ இடையே ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விரிவான பேச்சுவார்த்தையில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

வர்த்தகம், இறக்குமதி வரி, குடியேற்றம், நுழைவு இசைவு (விசா) உள்ளிட்டவை தொடர்பான அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் கொள்கைகளால் இந்திய-அமெரிக்க உறவுகள் கடந்த ஓராண்டாக பின்னடைவுக்கு உள்ளாகின.

இருதரப்பு உறவைச் சீரமைக்கும் நோக்கத்தின்கீழ், அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மார்கோ ரூபியோ 4 நாள்கள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு சனிக்கிழமை வந்தார்.

**ஜெய்சங்கர்-ரூபியோ சந்திப்பு:** தில்லியில் பிரதமர் மோடியை சனிக்கிழமை சந்தித்துப் பேசிய ரூபியோ, வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருடன் ஞாயிற்றுக்கிழமை இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். வர்த்தகம், பாதுகாப்பு, முக்கியக் கனிமங்கள், எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு உறவுக்கு உத்வேகமளிப்பது குறித்து அவர்கள் ஆலோசித்தனர். மேற்காசிய போரின் தாக்கங்கள் மற்றும் எல்லை தாண்டிய பயங்கரவாதம் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்தியா-அமெரிக்கா இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்துக்கான செயல்திட்டம் கடந்த பிப்ரவரியில் வெளியிடப்பட்ட நிலையில், ஒப்பந்தத்தின் முழு அம்சங்களையும் இறுதி செய்ய பலகட்டப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. இந்தச் சூழலில், விரைவில் வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்ள இரு நாடுகளும் தீர்மானித்துள்ளன.



தில்லியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இருதரப்பு பேச்சுவார்த்தையின்போது சந்தித்து கைகுலுக்கிய அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

### மேற்காசிய விவகாரத்தில் நல்ல செய்தி வரும்: ரூபியோ

'ஹோர்முஸ் நீரிணையை முழுமையாகத் திறப்பது உள்பட மேற்காசிய போரை முடிவுக்கு கொண்டுவரும் அமெரிக்காவின் பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அடுத்த சில மணி நேரங்களில் நல்ல செய்தி வரும். இது தொடர்பான அறிவிப்பை அதிபர் டிரம்ப் வெளியிடுவார்' என்று தில்லியில் செய்தியாளர்களிடம் மார்கோ ரூபியோ தெரிவித்தார்.

இதனிடையே, ட்ரூத் சமூக ஊடகத்தில் பதிவிட்ட அதிபர் டிரம்ப், 'அமெரிக்கா-ஈரான் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாகவும், ஒழுங்குடனும் முன்னேற்றம் கண்டு வருகிறது. இருதரப்பும் உரிய நேரமெடுத்து, சரியானதைச் செய்ய வேண்டும். எந்தத் தவறுகளுக்கும் இடமளித்துவிடக் கூடாது. ஒப்பந்தம் எட்டப்பட்டு, சான்றளிக்கப்பட்டு, கையொப்பமிடப்படும் வரை ஹோர்முஸ் நீரிணையில் அமெரிக்காவின் முற்றுகை தொடரும்' என்று தெரிவித்துள்ளார்.

**பரஸ்பரம் பயனுள்ள ஒப்பந்தம்:** இருதரப்பு சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களுக்கு கூட்டாக அளித்த பேட்டியில் மார்கோ ரூபியோ கூறியதாவது:

டிரம்ப் நிர்வாகத்தின் வர்த்தக கொள்கையானது, உலகளாவிய வர்த்தகம் மீதான அமெரிக்காவின் ஒட்டுமொத்த அணுகுமுறையை மறுகட்டமைக்கும் நோக்கம் கொண்டதாகும். மாறாக, இந்தியா உள்பட எந்தவொரு நாட்டையும் குறிவைப்பதல்ல.

வர்த்தக ரீதியிலான சமநிலையின்மையை நாங்கள் சரி செய்ய வேண்டியுள்ளது. இதன்மூலம் கூட்டாளி நாடுகளுடன் பரஸ்பர பலன்தரும் வர்த்தக ஏற்பாடுகளை நாடுகிறோம். இந்தியாவுடன் பரஸ்பரம் பயனுள்ள-நிலையான வர்த்தக ஒப்பந்தம் விரைவில் கையொப்பமாகும். இந்தப் பணியில் சிறப்பான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

**உறவுகள் வலுப்படும்:** ஐரோப்பிய நாடுகள் உள்பட பிற நட்பு நாடுகளுடனும் அமெரிக்கா வர்த்தகப் பிரச்னையை எதிர்கொண்டுள்ளது.

இந்தியாவைப் பொருத்தவரை, பெரிய பொருளாதார நாடு; முன்னணி வர்த்தக கூட்டாளி என்பதே வித்தியாசம். இந்தியாவுடன் பெரும் வர்த்தகத்தில் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். இத்தகைய பிரம்மாண்டமான நாட்டுடன் வர்த்தக சமநிலைப்படுத்துதலை மேற்கொள்வதில் பெரிய வித்தியாசம் இருக்கிறது என்பது உண்மைதான்.

இந்திய-அமெரிக்க உறவுகள் உத்வேகம் இழக்கவில்லை. அவை முன்னேற்றப் பாதையில் பயணிக்கும். டிரம்ப் நிர்வாகத்தின் இறுதிக்குள் முன்னெப்போதும் இல்லாத அளவில் உறவுகள் வலுப்படும். அதுவே எங்களின் இலக்கு என்றார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளித்த ரூபியோ, 'பாகிஸ்தான், சீனாவுடனான அமெரிக்காவின் உறவுகள், இந்தியா உடனான உத்திசார் கூட்டுறவுக்கு ஊறுவிளைவிப்பதாக நாங்கள் கருதவில்லை. முக்கியமான உத்திசார் கூட்டாளி என்ற முறையில் பல்வேறு விவகாரங்களில் இந்தியாவுடன் இணைந்து செயல்படுகிறோம்' என்றார்.

**இந்தியாவின் 5 முன்னுரிமைகள்:** எஸ்.ஜெய்சங்கர் கூறுகையில், 'இந்தியா தனது எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்ய எரிபொருள் கொள்முதலை தொடர்ந்து பன்முகப்படுத்தும். தனது கொள்முதல் நாடுகளைத் தேர்வு செய்ய இந்தியாவுக்கு முழு சுதந்திரம் உண்டு.

அமெரிக்காவில் இருந்து எரிசக்தி இறக்குமதி குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. சர்வதேச அளவில் எரிபொருள் தடையின்றி கிடைக்கவும், குறைந்த விலையைப் பராமரிக்கவும் இரு நாடுகளும் அக்கறை கொண்டுள்ளன.

அமெரிக்கா, இஸ்ரேல், ஈரான், வளைகுடா நாடுகளுடன் நல்லுறவைக் கொண்ட வெகுசில நாடுகளில் இந்தியாவும் ஒன்று. தற்போதைய சூழலில், இந்த நல்லுறவைப் பராமரிப்பது சவாலானதாகும்.

போர்களுக்குப் பேச்சுவார்த்தை மற்றும் ராஜீய ரீதியில் அமைதித் தீர்வு, தடையற்ற-பாதுகாப்பான கடல்சார் வர்த்தகம், சர்வதேச சட்டத்துக்கு மதிப்பளித்தல், சந்தைப் பங்குகள் மற்றும் வளங்களை ஆயுதமாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல், நம்பிக்கைக்குரிய கூட்டுறவு-மீள்தன்மைமிக்க விநியோகச் சங்கிலி ஆகியவை இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சார்ந்த 5 முன்னுரிமைகளாகும். ஹோர்முஸ் நீரிணையில் பாதுகாப்பான, தடையற்ற கப்பல் போக்குவரத்தை உறுதி செய்ய இந்தியாவும், அமெரிக்காவும் மிகுந்த ஈடுபாட்டுடன் செயலாற்றி வருகின்றன' என்றார்.

### விசா கொள்கையில் மாற்றம்: அமெரிக்காவிடம் இந்தியா கவலை

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நிர்வாகத்தின் நுழைவு இசைவு (விசா) மற்றும் குடியேற்றக் கொள்கை மாற்றங்கள் குறித்து வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோவிடம் எஸ்.ஜெய்சங்கர் ஞாயிற்றுக்கிழமை கவலை தெரிவித்தார்.

டிரம்ப் நிர்வாகத்தின் புதிய குடியேற்றக் கொள்கை மற்றும் ஹெச்1பி விசா கட்டணம் பன்மடங்கு உயர்வு போன்ற நடவடிக்கைகளால் இந்தியப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவின் கிரீன் கார்டு (நிரந்தர குடியிருப்பாளர் அட்டை) பெறுவதற்கு விண்ணப்பதாரர்கள் தங்களின் சொந்த நாட்டுக்கு திரும்பிச் சென்று, அங்கிருந்தே விண்ணப்பிக்க வேண்டும் என்ற கெடுபிடியான விதிமுறை குறித்து கவலைகள் எழுந்துள்ளன.

**இந்தியாவின் எதிர்பார்ப்பு:** இருதரப்பு சந்திப்புக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய எஸ்.ஜெய்சங்கர், 'மக்கள் ரீதியிலான தொடர்புகளே, இந்திய-அமெரிக்க உறவுக்கு மையமாக உள்ளன. சட்டபூர்வ பயணிகள், விசா பெறுவதில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து ரூபியோவிடம் பேசினேன்.

சட்டவிரோதமான, முறையற்ற இடப்பெயர்வைத் தடுப்பதில் ஒத்துழைக்கும் அதேவேளையில், சட்டபூர்வ இடப்பெயர்வு பாதிக்கப்படக் கூடாது என்பதே எங்களின் எதிர்பார்ப்பு. ஏனெனில், இது நமது வர்த்தகம், தொழில்நுட்பம், ஆராய்ச்சி ஒத்துழைப்புடன் தொடர்புடையது' என்றார்.

**'சிக்கல்கள் இருக்கக் கூடும்':** இந்த விவகாரம் தொடர்பாக பதிலளித்த ரூபியோ, 'கடந்த சில ஆண்டுகளில் அமெரிக்காவுக்குள் 2 கோடிக்கும் மேற்பட்டோர் சட்டவிரோதமாக நுழைந்ததால் குடியேற்ற நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இது, இந்தியாவால் ஏற்பட்டதல்ல, பரவலாக ஏற்பட்டதாகும். இந்த சவாலுக்கு தீர்வுகாண்பதற்காக, குடியேற்ற அமைப்புமுறையை மேம்படுத்தி வருகிறோம். இந்தச் சீர்திருத்த காலகட்டத்தில் சில சிரமங்களும், முரண்பாடுகளும் இருக்கக் கூடும். எனினும், திறன்மிக்க அமைப்புமுறையால் அனைத்துத் தரப்பினரும் பலனடைவர்' என்றார்.

# சட்டவிரோத குடியேறிகளை அடைத்து வைக்க மையங்கள்

## மேற்கு வங்க அரசு உத்தரவு

கொல்கத்தா, மே 24: சட்டவிரோத குடியேறிகளை அடைத்து வைக்க மாவட்டந்தோறும் மையங்களை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு மேற்கு வங்க மாநில அரசு உத்தரவிட்டது.

சட்டவிரோத குடியேறிகளை அவர்களது தாய்நாட்டுக்கு அனுப்பும் வரை தற்காலிகமாக இந்த மையங்களில் தங்கவைக்க மேற்கு வங்க அரசு முடிவு செய்துள்ளது.

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் வென்று ஆட்சியமைத்தால் சட்டவிரோத குடியேறிகளை மாநிலத்தில் இருந்து வெளியேற்றுவோம் என பாஜக வாக்குறுதி அளித்திருந்தது.

இந்நிலையில், திரிணமூல் காங்கிரஸ் கட்சியை வீழ்த்தி ஆட்சியமைத்த சில நாள்களில் இதைச் செயல்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை முதல்வர் சுவேந்து அதிகாரி தலைமையிலான பாஜக அரசு தொடங்கியுள்ளது.



இதுதொடர்பாக மேற்கு வங்க உள்துறை மற்றும் வன விவகாரங்கள் துறையின் வெளிநாட்டினர் பிரிவு மே 23-ஆம் தேதி பிறப்பித்த உத்தரவில், 'மேற்கு வங்கத்தில் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் எனக் கண்டறியப்பட்டு கைது செய்யப்பட்ட வெளிநாட்டினர் மற்றும் சிறையில் இருந்து விடுதலையான வெளிநாட்டினரை அடைத்து வைக்க மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சியர்கள் உள்கட்டமைப்புகளை ஏற்படுத்த வேண்டும். அவர்களை தாய்நாட்டுக்கு அனுப்பும் வரை தற்காலிகமாக இந்த மையங்களில் தங்க வைக்க வேண்டும்.

ரோஹிங்கயாக்கள் மற்றும் வங்கதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக குடியேறியவர்களைக் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக கடந்த ஆண்டு மே மாதம் மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இதன் நகல்கள் மாநில காவல் துறை தலைமை இயக்குநர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், காவல் ஆணையர்கள் மற்றும் வெளிநாட்டினர் பிராந்திய பதிவு அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படுகிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் வங்கதேச-மேற்கு வங்க எல்லையில் வேலிகள் அமைப்பதற்கான நிலங்களை ஒதுக்கிய நிகழ்வில் எல்லை பாதுகாப்புப் படை அதிகாரிகளை சந்தித்து சுவேந்து அதிகாரி ஆலோசனை நடத்தினார்.

அப்போது அவர் பேசுகையில், 'குடியுரிமை திருத்தச் சட்டத்தின்கீழ் குடிமக்களாக அங்கீகரிக்கப்படாதவர்களைக் கைது செய்து உடனடியாக எல்லை பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்க வேண்டும். அவர்கள் வங்கதேச எல்லை படையினரிடம் சம்பந்தப்பட்ட நபர்களை ஒப்படைத்து மேற்கு நாடு கடத்தும் பணிகளை மேற்கொள்வார்கள்' என்றார்.

# 'தாயுமானவர் திட்டம்' மறுசீரமைப்புடன் தொடரும்: அமைச்சர் வி.காந்திராஜ்



அரக்கோணம், மே 24: கடந்த ஆட்சியில் தொடங்கப்பட்ட தாயுமானவர் திட்டம் மறுசீரமைப்பு செய்யப்பட்டு தொடரும் என கூட்டுறவுத் துறை அமைச்சர் வி.காந்திராஜ் தெரிவித்தார்.

அரக்கோணத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது: முதல்வர் ஏற்கனவே அறிவித்தபடி நடைமுறையில் ரேஷன் கடைகளில் உள்ள தாயுமானவர் திட்டம் உள்ளிட்ட அனைத்து திட்டங்களும் தொடரும்.

அதில் ஏதேனும் பிரச்னைகள் இருப்பின் அவை மறுசீரமைப்பு செய்யப்பட்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும்.

கடந்த ஆட்சியில் இருந்த ஊழல்கள் இந்த ஆட்சியில் இருக்காது. ஊழலற்ற ஆட்சியாக தவெக ஆட்சி இருக்கும். ரேஷன் கடைகளில் இருக்கும் பிரச்னைகள் குறித்து கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும். உணவு பொருள்கள் கடத்தல் விஷயத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்களோடு தீவிர ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு இனி தவறுகள் நடைபெறாவண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும். ரேஷன் கடை பணியாளர்களின் குறைகள், கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அதற்கு முதல்வரின் ஆலோசனைகள் பெறப்பட்டு தகுந்த சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ரேஷன் கடைகளில் தரமான அரிசி வழங்கப்படவில்லை என்ற குறை இதுநாள் வரை இருந்து வந்த நிலையில் இனி இக்குறை வராதவாறு நடவடிக்கை கண்டிப்பாக இருக்கும்.

அரக்கோணம் நகர போக்குவரத்து பிரச்னை குறித்து காவல் துறையினருடன் கலந்து ஆலோசனை செய்து விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார் அமைச்சர் வி.காந்திராஜ்.

# எரிபொருள் பயன்பாட்டில் சிக்கனம்

முனைவர் என்.பத்ரி

ஈரான் மீது இஸ்ரேல்–அமெரிக்கா நடத்தி வரும் போர் காரணமாக மேற்காசியப் பகுதிகளில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது. இதனால், கச்சா எண்ணெய் உற்பத்தி மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, உலகின் பல நாடுகள் தங்களின் எரிபொருள் பயன்பாட்டில் பல கடுமையான கட்டுப்பாடுகளை அமல்படுத்தத் தொடங்கியுள்ளன.

பல ஆசிய நாடுகள் பொதுமக்களுக்கு பொதுப் போக்குவரத்து, மிதிவண்டிப் பயணம், வாகனப்பகிர்வு போன்ற பயண முறைகளை பரிந்துரை செய்துள்ளன. மியன்மரில் தனியார் வாகனங்கள் பதிவு எண்களின் ஒற்றை, இரட்டை முறையில் அடுத்தடுத்த நாள்களில் மட்டும் இயங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும், தென்னாப்பிரிக்காவின் பல மாகாணங்களில் பொதுமக்கள் அதிக அளவில் எரிபொருள் வாங்குவதில் ஒதுக்கீட்டு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய மக்கள் தமது அன்றாட வாழ்வில் பெட்ரோலின் பயன்பாட்டைக் குறைக்க வேண்டும் என்று பிரதமர் மோடி கூறியுள்ளார். அவர் தனது பாதுகாப்பு வாகனங்களையும் 50 சதவீதமாக குறைத்துள்ளார். அவரின் பாதுகாப்பு நெறிமுறைகளில் குறைவான வாகனங்களே பயன்படுத்தப்படுகின்றன. பொதுமக்கள் மின்சார வாகனங்களைப் பயன்படுத்தவும், புதிய வாகனங்களை வாங்காமல் கையிருப்பு வாகனங்களையே பயன்படுத்தும்படியும் மேலும் அவர் வலியுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தனியார் நிறுவனங்களும் அரசு அலுவலகங்களும் சாத்தியமான சூழ்நிலைகளில் வீட்டிலிருந்தே வேலை செய்யும் முறையையும், இணையவழி கூட்டங்களை ஊக்குவிக்கவும் அவர் வலியுறுத்தியுள்ளார். மெட்ரோ ரயில், பேருந்து, கார் பகிர்வு முறையை பொதுமக்கள் பயன்படுத்த வேண்டும் என்றும், தங்கம் வாங்குவதை ஓராண்டுக்கு தள்ளிப் போடுமாறும், தேவையற்ற வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்க்குமாறும் பிரதமர் மோடி அறிவுறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மத்திய அமைச்சர்களும், மத்திய பிரதேசம், ராஜஸ்தான் போன்ற மாநில முதல்வர்களும் தங்களது பாதுகாப்பு வாகனங்களைக் குறைத்து வருகின்றனர். எரிபொருள் சேமிப்பைக் கருத்தில் கொண்டு மெட்ரோ ரயில், பேருந்து உள்ளிட்ட பொதுப் போக்குவரத்தை தில்லி அமைச்சர்கள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

சர்வதேச நெருக்கடிக்கு மத்தியில் பல நாடுகளில் பெட்ரோலியப் பொருள்களின் விலை 30% முதல் 70% வரை உயர்ந்துள்ள நிலையில் இந்தியாவில் தற்போது விலை உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ள சமயத்திலும் எண்ணெய் நிறுவனங்கள் உள்நாட்டு நுகர்வோர் மீது அதிக சுமையை ஏற்றவில்லை. சமீப நாள்களில் முன்பதிவு செய்யப்பட்ட 1.26 கோடி சமையல் எரிவாயு சிலிண்டர்களில் 1.14 கோடி சிலிண்டர்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. அதே காலகட்டத்தில், 17,000 டன்னுக்கும் அதிகமான வணிக திரவ எரிவாயுவும், 762 டன்னுக்கும் அதிகமான ஆட்டோ திரவ எரிவாயுவும் விற்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், தில்லியில் பொதுமக்கள் மெட்ரோ ரயில், அரசுப் பேருந்து, மின் வாகனங்கள் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டும் என தில்லி முதல்வர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாம் பெட்ரோலை திரவ எரிபொருளாக சமையலுக்கும், திட எரிபொருளாக வாகனங்களுக்கும் பயன்படுத்தி வருகிறோம். தற்போதைய சூழலில் பெட்ரோல் பயன்பாட்டைக் குறைக்கும் முன்னெடுப்புகளில் நாம் ஈடுபடுவது நல்லது. நமது வாகனங்களை சீரான வேகத்தில் ஓட்டுவது, அடிக்கடி வாகனத்தின் வேகத்தைக் கூட்டுவதையும், குறைப்பதையும் தவிர்ப்பது, வாகனத்தை வேகமாக இயக்கத் தொடங்குவதைத் தவிர்த்தல், வாகனத்தின் வேகத்தை படிப்படியாக அதிகரித்தல், அடிக்கடி பிரேக் போடுவதைத் தவிர்த்தல், நிறுத்துமிடத்துக்கு சற்று தொலைவிலேயே வேகத்தைக் குறைத்து நிறுத்துதல் போன்ற செயல்பாடுகளில் கவனம் செலுத்தலாம்.

போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள நேரங்களிலும், பகுதிகளிலும் பயணத்தைத் தவிர்க்கலாம். சிக்னல்களில் நீண்ட நேரம் காத்திருக்கும் நேரத்தில் வண்டியின் இயந்திரத்தை அணைத்து விடுவது நல்லது. வாகனத்தின் டயர்களில் சரியான அளவு காற்று இருப்பதை உறுதி செய்து கொள்ளுதல், இயந்திர எண்ணெய், காற்று வடிகட்டி போன்றவற்றை குறிப்பிட்ட கால இடைவெளியில் மாற்றுதல் போன்றவையும் நம் வாகனங்களின் எரிபொருள் தேவையைக் குறைக்கும். வாகனத்தில் அனுமதிக்கப்பட்டதை விட அதிக பொருள்களை ஏற்றிச் செல்வதை தவிர்ப்பது, நெடுஞ்சாலைகளில் செல்லும்போது மட்டும் குளிர்சாதனத்தை பயன்படுத்துவது, எரிபொருள் கலனில் தேவையான அளவு மட்டும் பெட்ரோலை நிரப்புதல், இரு சக்கர வாகனங்களை சாய்வாக நிறுத்தாமல் நேராக நிறுத்துவது, வாகனத்தில் நம்பகமான உதிரிபாகங்களை மட்டுமே பயன்படுத்துதல், காலை நேரங்களில் மட்டும் எரிபொருளை நிரப்புதல், எரிபொருள் கலனில் எப்போதும் அரைப் பங்கிற்கு மேல் எரிபொருள் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுதல், வாகனத்தை சரியான கால இடைவெளியில் பராமரித்தல், எப்போதும் சீரான வேகத்தில் வாகனத்தை இயக்குதல் போன்ற ஓட்டுநரின் செயல்பாடுகள் எரிபொருள் சிக்கனத்துக்கு உதவும்.

தற்போது நிலவி வரும் எரிபொருள் தட்டுப்பாட்டை சமாளிப்பதற்காக நாம் மின்னடுப்பைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டோம்.

எனவே, நாம் அன்றாட வாழ்வில் நுகரும் மின்சாரத்தின் அளவு இனிவரும் நாள்களில் அதிகரிக்கலாம். இவை அனைத்தும் சேர்ந்து பணவீக்கத்துக்கு நம்மைக் கொண்டு செல்லலாம். அதன் காரணமாக பல்வேறு பொருள்களின் விலைகணிசமாக உயரக் கூடும்.

நமது வருமானம் உயர வழியில்லாத நிலையில், விலைவாசி அதிகரிப்பு நமது வாழ்க்கையைப் புரட்டிப் போடலாம். நமது சேமிப்பு குறைந்து, கடன் வாங்க நேரலாம். எனவே, தற்போதுள்ள எரிபொருள் தட்டுபாடு எப்போது முடிவுக்கு வரும் என்று யாருக்கும் தெரியாது. எனவே, 'எரிபொருள் சிக்கனம் தேவை இக்கணம்' என்பது சரிதானே?